**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

**Case No : CC.No. 303/2019**

Prosecution witness: 2

| | | | |
|---|---|---|---|
| Name: | திவான் மைதீன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused absent. Petition U/s 317 crpc filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.06.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம் தனிப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் கடந்த 31.12.2018 ம் ஆண்டு கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது எனது ரகசிய தகவலாளி 10.45 மணிக்கு நிலையம் ஆஜராகி நேரில் சொன்ன தகவலை பொது நாட்குறிப்பில் பதிவு செய்து 11.00 மணிக்கு தனி அறிக்கையாக காவல் ஆய்வாளர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று 11.15 மணிக்கு ரைடு பார்ட்டியாக தலைமைக்காவலர்-1651 ராஜகுமரன், முதல் நிலை காவலர் 1870-முத்துக்குமரன், மற்றும் முதல் நிலை காவலர் 1891-சிலம்பரசன் ஆகியோரை நியமித்து தக்க உபகரணங்களுடன் காவல் வாகனத்தில் நிலையம் விட்டு புறப்பட்டு கம்பம் காட்டுப்பள்ளிவாசல் அருகில் பதினெட்டாம் கால்வாய் பகுதியில் 11.30 மணிக்கு போதைப்பொருள் சம்பந்தமாக கண்காணிப்பில் இருந்தபோது வடக்கில்

இருந்து தெற்கு நோக்கி வந்த KL 04 AM 2925 கூண்டாய் இயான் காரை அடையாளம் காட்டி விட்டு தகவலாளி சென்றுவிட்டார். மேற்படி காரில் இருந்தவர்களிடம் எங்களை போலீஸ்பார்ட்டி சகிதம் அறிமுகம் செய்துகொண்டோம். மேற்படி காரை 11.45 மணியளவில் காரில் இருந்தவர்களை விசாரித்தபோது 1.தங்கராஜ் (வயது24) த/பெ. சிவனாண்டி தேவர் என்றும் மற்ற 3 நபர்கள் கேரளாவை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது. 2 வது நபர் -ராகுல்ராஜேந்திரன், 3 வது நபர்- டிலைட் மாத்யூ, 4 வதுநபர்-பிஜுபாபு என்று தெரியவந்தது. மேற்படியார்களிடம் 12.15 மணிக்கு தாங்கள் வந்த காரில் கஞ்சா என்ற போதைப்பொருள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. எனவே, உங்கள் காரை சோதனை செய்யவேண்டும் என்றும் தாங்கள் விரும்பினார் நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவிதழ் பெற்ற அதிகாரியிடமோ அழைத்து செல்ல உங்களுக்கு உரிமை உள்ளது என்று கூறியபோது அவர்கள் தங்களை எங்கும் அழைத்து செல்லலாம் என்றும் காவல் துறையினராகிய தாங்களே சோதனை இடலாம் என்று கூறினார்கள். அவர்கள் கூறியதை தனித்தனியே சம்மத கடிதமாக எழுதி கையொப்பம் பெற்றோம். அதன் பின்னர் ராகுல்ராஜேந்திரன் என்பவர் தானாக காரின் பின் சீட்டின் கீழ் இருந்து வெள்ளை நிற கேரி பையை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை நாங்கள் பிரித்து பார்த்தபோது காக்கி கலரில் பொட்டலத்தில் இலை , தழைகளுடன் கூடிய கஞ்சா என்ற போதைப்பொருள் காணப்பட்டது. நாங்கள் தயாராக கொண்டுசென்ற தராசில் அதை எடைபோட்டபோது அது சுமார் 2 கிலோ 200 கிராம் இருந்தது. அதில் 50 கிராம் மாதிரிக்காக எடுத்து துண்டுத்தாள் ஒட்டி SHO சீல்வைத்தோம். மீதம் உள்ள 2 கிலோ 150 கிராம் கஞ்சாவை அதே கவரில் மடித்து நூலால் கட்டி தக்க விபரங்கள் அடங்கிய துண்டுத்தாள் ஒட்டி SHO சீல் வைத்தோம்.

பின்னர் 13.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து தனிநபர் சாட்சிகள் எவரும் இல்லாததால் உடன் இருந்த காவலர்கள் முன்னிலையில் மேற்படி கஞ்சா மற்றும் கஞ்சா கடத்த பயன்படுத்திய காரை அத்தாட்சி மூலம் கைப்பற்றினோம். அத்தாட்சியில் எதிரிகளிடம் கையொப்பம் பெற்றோம். பின்னர் மேற்படி கஞ்சா பற்றி 1 ம்ஏ திரியிடன் விசாரித்தபோது நானும் எனது மகன் சிவராஜும் கம்பம் விவேகானந்தர் பகுதியில் குடியிருந்து வருவதாகவும் வழக்கமாக ஆந்திரா சென்று குறைந்து விலைக்கு வாங்கி கேரளாவிற்கு சென்று அதிக விலைக்கு விற்பதை வழக்கமான கொண்டிருநததாகவும் கூறினார். அதேபோல் கேரளா நபர்களிடம் தானும் தன் மகன் சிவராஜ்ம் கஞ்சாவை விலைக்கு வாங்கி கேரளா நபர்களிடம் விற்ற விபரத்தை கூறினார். தற்போது கேரளநபர்களை தமிழ்நாடு எல்லையை கடத்து அவர்களை அனுப்பி வைக்க உடன் வந்ததாக கூறினார். மேற்படி கஞ்சா கடத்திய எதிரிகளை தயாராக கொண்டு சென்ற கைது அறிவிப்பு படிவத்தை பூர்த்தி செய்து அவர்களுக்கு கைது அறிவிப்பு செய்து கையொப்பம் பெற்று கைது செய்தேன். தங்கராஜ் மகன் சிங்கராஜை தேடி அவரது வீட்டிற்கு சென்றபோது அவர் தலைமறைவாகிவிட்டார். 15.00 மணியளவில் கைப்பற்றிய கஞ்சா மற்றும் கஞ்சா கடத்த பயன்படுத்திய வாகனம் மற்றும் எதிரிகளுடன் நிலையம் வந்து நடவடிக்கை எடுக்கும் படி பிரிவு 57ன் படியான அறிக்கையை தயாரித்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் எதிரிகள் மீது குற்ற எண் 596/2018ன் கீழ் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார். எனக்கு கிடைத்த ரகசிய தகவல் அ.சா.ஆ. 1 ஆகும். அனுமதி கோரும் கடிதம் அ.சா.ஆ. 2 ஆகும். தனித்தனியே சார்பு செய்யப்பட்ட சோதனை சம்மத கடிதங்கள் அ.சா.ஆ. 3 முதல் 6 ஆகும். அத்தாட்சி

அ.சா.ஆ. 7 ஆகும். பிரிவு -57 ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ. 8 ஆகும். பகுப்பாய்வு சென்று திரும்பிய கஞ்சா சா.பொ.1 ஆகும். மீதம் உள்ள கஞ்சா சா.பொ.2 ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தகவல் வருமபோது காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் இல்லை. அவர் என்ன அலுவலில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. தகவல் வந்து சுமார் 10 நிமிட நேரம் நிலையத்தில் இருந்தோம். அந்த இடைவெளி காலத்தில் கிராம் நிர்வாக அதிகாரி மற்றும் உதவியாளரை அழைக்கவில்லை. தகவலில் எதிரிகளின் பெயர் விபரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தகவலில் உடனடி மேல் அதிகாரியின் மேற்குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் , மற்றும் அத்தாட்சியில் எதிரி-சிவராஜன் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரி சிவராஜன் வீட்டில் அவர் அடையாளம் தொடர்பான ஆவணங்கள் எதையும் கைப்பற்றவில்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் கைப்பற்றுதல் மகஜருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு

தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.